# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 10.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10429/B/19**

திரு.R.முருகன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.R.முருகன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திரு.தங்கபாண்டியன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், விருதுநகர் மாவட்டம் அவர்கள் பங்கேற்றார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 23.05.2019 தேதியிட்ட மனுவில், திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் அச்சம்தவிர்த்தான் ஊராட்சியில் உள்ள அக்கரைப்பட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தின் கட்டிட உறுதி தன்மை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடித நாள் 06.04.2019 தொடர்பான தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. 29.03.2019 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் தகவல் திருப்தியளிக்காததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 07.08.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். 29.08.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு அலுவலரின் தகவல் போதிய தகவல் அல்ல எனக்கருதி, மனுதாரர் 19.10.2019 தேதியிட்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கும் பொருட்டு 7 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு, மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் கோரிய தகவல்களை வழங்க ஆணையிடப்பட்டது.

5. மேற்படி ஆணைக்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்க தவறும் பட்சத்தில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலருக்கு நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.25,000/- வரை தண்டம் விதிக்கப்படும் என்றும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைக்கப்படும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

6. மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களில் ஆட்சேபனை ஏதும் இருப்பின் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனு தாக்கல் செய்து தனக்குரிய பரிகாரத்தை தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டு இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(ரா.பிரதாப்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10429/B/19**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம்.

திரு.R.முருகன்,
முத்துமாரியம்மன் கோவில் தெரு,
அச்சம்தவிர்த்தான் அஞ்சல்,
திருவில்லிபுத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம் - 626 137.

Copy to: File
MP/PA-19.11.20